

கிறிஸ்து சீடனாகிய புனித தோமையாரின் திருவிதாங்கோடு ஆலயம்

அருள்திரு பெர்சிலீபி றம்பான்
நிர்வாகி புனித தோமையார் சர்வதேச திருத்தலம்,
திருவிதாங்கோடு

நற்செய்தி பரப்ப நல்மகிழ்வுடன் AD 53-ல் இந்தியாவில் வந்த தோமையார் AD 63-ல் திருவிதாங்கோட்டில் ஒரு கோவில் நிறுவினார். இந்த கோவில் 20 நூற்றாண்டுகளுக்கு பின்னர் அதனுடைய ஒரு வரலாற்று சான்றாக இன்றும் நிலை நிற்கின்றது. கன்னியாகுமரி முதல் காசர்கோடு வரை உள்ள பகுதியை சேர நாடு என்று அழைக்கப்பட்டது. புனித தோமையாரின் காலயளவில் சேர நாட்டில் ஏழரை ஆலயங்களை நிறுவினார் என வரலாறு கூறுகின்றது. கெடுங்கல்லூருக்கு பக்கத்தில் உள்ள மாலியங்கரை சாவக்காடு பக்கத்தில் உள்ள பாலையூர், வடக்கன் பறவூர் பக்கத்திலுள்ள கோக்கமங்கலம் நிரணம், கரிக்கோணி பக்கத்தில் உள்ள கொல்லம், தங்கசேரி நிலைக்கல், சாயல் என்ற இடங்களில் தோமையார் ஆலயங்களை நிறுவினார். அரப்பள்ளி என்று தெரியப்படுகின்ற திருவிதாங்கோடு கோவில் முழுமையான ஒரு ஆலயமாக நிறுவப்பட்டது.

அலயத்தின் அளவு :

5.5 அடி நீளமும் 18 அடி அகலமுமான ஆலயம் 1 அடி அகலமுள்ள கருங்கல் சுவருகளால் உருவாக்கப்பட்டது. உள்ளே காணப்படுகின்ற கருங்கல் தூண்களுக்கு 2 அடி அகலமும் 8 அடி உயரமும் உண்டு இதனுடைய மேல் கூரையும் கருங்கல் பாளிகள் கொண்டு வேயப்பட்டிருக்கிறது.

ஆலயத்தின் முன்வாசலில் 5.5 உயரமும் 2.5 அடி அகலமும் உண்டு இதன் மேல் பகுதியில் புனித திருப்பலிக்கு உபயோகப்



படுத்துகின்ற அப்பக்கிண்ணத்தின் வடிவமும் அதற்கு இரு பக்கங்களிலும் கைகள் விரித்து செபிக்கின்ற இரண்டு தூதர்களும் விண்ணகம் கைப்பற்றிய வடிவமுள்ள படங்களும் கருங்கல்லினால் செதுக்கி வைக்கப்பட்டுள்ளது.

போர்ச்சுக்கீசியர்கள் பரிசு கொடுத்த செபபீடமும் தூபகலசமும் கோவிலில் காணப்படுகிறது செப பீடத்தினுடைய இருபுறங்களிலும் செய்துள்ள படங்களும் மக்களை அதிகம் வியப்புக்குள்ளாக்கியது. மரம் கொண்டு வேலை செய்த இந்த பேடகத்தினுடைய வாசல்களில் சாவி ஏந்தி நிற்கின்ற புனித பேதுருவும் நற்செய்தியினுடைய சுழற்றிய வாளேந்திய புனித பவுலடியாரின் சித்திரங்கள் செதுக்கப்பட்டுள்ள பேடகத்தின் பக்கவாட்டில் கிறிஸ்துவினுடைய சிலுவை மரணத்தை நினைவு கூருகின்ற விதத்தில் உள்ள இரண்டு படங்கள் உண்டு.

1. ஒரு பெலிக்கல் பறவை தன்னுடைய குஞ்சுகளுக்கு மார்பை குத்தி திறந்து கடைசி துளி இரத்தம் வரையும் ஊற்றி கொடுத்து அவைகளுடைய தாகம் தீர்க்கிறது.

   கடவுள் தன்னுடைய கடைசி துளி இரத்தம் வரையும் தன்னுடைய மக்களாகிய நமக்கு அளித்ததின் நினைவாகும்.

2. ஒரு பினிக்ஸ் பறவை தீயில் எரிந்து அதனுடைய சாம்பலில் நின்று புதிய ஒன்றுக்கு உருவம் கொடுக்கிறது போல, இயேசு கிறிஸ்து உயிர்தெழுந்ததை நினைவுப்படுத்துகிறது.

பெட்டகத்தின் உள்ளே பலகைகளின் சிலுவை அடையாளங்கள் காணலாம். நடுவே உள்ள பெரிய சிலுவையினுடைய கீழ் இரண்டு தலையோடுகளுடைய படம் காணப்படுகிறது. பேடகத்தில் குறிப்பிடப்பட்ட எழுத்துகள் இது வரையிலும் புரியவில்லை மூருங்கைச் சாறுகளால் இந்த படங்கள் வரையப் பட்டிருக்கின்றது. இன்றும் இது தங்க நிறத்தால் ஜொலிக்கிறது. ஜெபபீடத்தினுடைய பின் சுவரில் கருங்கல்லில் ஒரு சிலுவை செதுக்கி வைக்கப்பட்டுள்ளது. தூணுகளில் உள்ள விளக்குகள், மின் விளக்குகள் வரும் முன் திரிபோட்டு எண்ணெய்



ஊத்தி வெளிச்சம் ஏற்படுத்தப்பட்டது. பல விதமான பூக்களும் படங்களும் சிறிதாக கருங்கள் சுவர்களில் காணலாம்.

பண்டைய காலங்களில் பயன்படுத்தியிருந்த திருமுழுக்கு தொட்டியும் ஆலயத்திலுனுள் பாதுகாக்கப்படுகிறது. ஆலயத்தின் வடக்கு பக்கத்தில் கால் கழுவுதற்கான ஒரு கல் தொட்டியும் முற் காலமுதல் அதை பத்திரபடுத்தி வைக்கப்பட்டுள்ளது.

A.D 1-ம் நூற்றாண்டில் சேர மன்னன் இமய வரம்பன் நெடுஞ்சேர லாதன் இமயமலை வரை பயணம் சென்றதாகவும் அந்த பயணத்தில் குந்தப்பர் அதாவது கோண்டகோறஸ் ராஜாவினுடைய விருந்தாளியாக தங்கினார் அந்த வேளையில் அங்கே இருந்த தோமையாருடைய அற்புத ஜெபங்களை கண்டறிந்து அவர்களையும் கொஞ்சம் குடும்பங்களையும் திருவிதாங்கோடு கொண்டு வரவும் செய்தனர். அரச குடும்பங்களில் உள்ளவர்கள் அரசரின் அனுமதியோடு கிறிஸ்துவின் வழியில் சேர்ந்தனர்.

துவக்கத்தில் உதய சான்றோர் என்ற ஒரு மனிதன் அவருடைய மக்களை சான்றமான் மிகா, யாக்கோபு, சன்றமான் மிக அஸ்திரியாஸ் கஹிஷா என்ற பெயரில் குருக்களாக நியமித்தனர். (மன்மிக என்றால் அரசகுலம் என்று பொருள்) இந்த குருக்களின் உறவினர்களுக்கு வீரராகவ பட்டயம் என்ற சாசனத்தை வழங்கினர். (ஏ ஸ்ரீதரன் மேனோன் கேரள வரலாறு பக்கம் 222) திருமுழுக்கு அடைந்தவர்கள் ஆலயத்தின் வடக்கு பக்கத்தில் வசித்து வந்தனர். புனித தோமையார் திருவிதாங்கோட்டில் வாழ்ந்த காலத்தில் திருவள்ளுவர் என்ற மகான் திருவிதாங்கோடு அருகில் உள்ள திருநாயினார் குறிச்சி என்ற இடத்தில் வசித்தார் திருவள்ளுவருடைய திருக்குறள் என்ற சுவடியில் கிறிஸ்தவ வசனத்தை காண முடியும்.

இது இவர்கள் தம்மில் உள்ள உறவை உறுதி படுத்துகின்றது. திருவள்ளுவரில் தோமயாருடைய போதனைகள் ஆதிக்கம் செலுத்தியிருந்ததாக கருதுவதில் தவறு இல்லை. தோமையார்



திருவிதாங்கோடு வந்தார் என்று கூறப்படும் வரலாற்று சுவடுகளும் சங்ககால காப்பியங்களும் இப்பொழுதும் உள்ளன. சங்ககால காப்பியங்களில் கிறிஸ்தவ சிந்தனைகள் கிறிஸ்தவ ஒருமைப்பாடு காணமுடிகிறது. சில பகுதிகளின் இடப்பெயர்களும் தோமையாருடைய நினைவை நமக்கு உணர்த்துகிறது.

முடிவுரை :

வரலாற்று சுவடுகளின் குறைவினாலும் தேவைககேற்ற கவனம் செலுத்தாமல் போன ஒன்றுதான் திருவிதாங்கோடு புனித மேரிமாதா தேவாலயம். இங்கே இருந்த கிறிஸ்தவ சமூகமும் மலங்கரை சபையுடைய மூன்றாம் கத்தோலிக்க புனித பெசேலியோஸ் ஹீவர்க்கீஸ் திதியன் பாபாயுடைய காலத்தில் இந்த ஆலயத்தின் திருப்பணிகளில் சபை கவனம் செலுத்தியது. கி.பி. 1942-ல் ஹீவர்க்கீஸ் றம்பான் இதற்காக நியமிக்கப்பட்டார். அவருடைய காலத்திற்கு பிறகு மீண்டும் கோயில் சபையினுடைய கவனத்தில் நின்று பின்தள்ளப்பட்டது. இன்று மீண்டும் இச்சபைக்கு முக்கியதுவம் கொடுத்து மக்கள் கவனம் செலுத்தவேண்டி உற்சாகப்படுத்தப்படுகிறார்கள். பற்பல சாதி மதத்தினரும் இன்று இந்த ஆலயத்தில் ஜெபிப்பதற்காக வருகிறார்கள். புனித தோமையாருடைய நற்செய்தியின் அடையாளமாக திருவிதாங்கோடு கோயில் உள்ளது. புனித தோமையார் பாரதத்தில் நற்செய்தி அறிவித்தின் ஒரு மைல்கல் ஆக திருவிதாங்கோடு தேவாலயம் உள்ளது.

திருவிதாங்கோடு கோயிலின் அற்புத எண்ணெய் :

திருவிதாங்கோடு தேவாலயத்தில் உள்ள திருவிளக்கில் உள்ள எண்ணெய் அதிக பிரசித்தி பெற்றது. பலசாதி மதத்தினரான விசுவாசிகள் இதை வீடுகளில் பாதுகாப்பதுண்டு. கோவில்களிலும் மற்ற காரியங்களுக்கும் இந்த எண்ணெயை விசுவாசிகள் பக்தியுடன் இதை பயன்படுத்துவதுண்டு. அநேக அற்புத நிகழ்ச்சிகள் நிகழ்ந்ததாக கூறுவதுண்டு. ஏராளமானோர் மகப்பேறு அடைந்து, நோய் மாறி சுகம் அடைந்தவராயும் விசுவாசிகள் சாட்சியம் அளிக்கின்றார்கள். அதிக



தொலை இடங்களில் இருந்து ஏராளமானோர் விளக்கெண்ணெயை தேடி வருவதுண்டு. தோமையாருடைய கைப்பட்ட தேவாலயத்தின் அணையாவிளக்கின் எண்ணெய் ஒரு ஆசீர்வாதத் தைலமாக விளங்குகின்றது. அதிகரித்து வரும் தேவைகள் காரணமாக இங்கே வருகிற எல்லா விசுவாசிகளுக்கும் தனித்தனியாக தயார்செய்த சிறு குப்பிகளில் கொடுக்கப்பட்டுவருகிறது. இதற்கு தேவையான எண்ணெயை விசுவாசிகள் காணிக்கையாக அளித்துவருகின்றன.